சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 1/2021

பெயர். திருமதி. முத்துலட்சுமி நாள் 21.06.2025
க /பெ. வீரபத்திரன்

**மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) 100 நாள் திட்டத்திற்கான வருகைப்பதிவேட்டை வைத்து தான் சம்பளம் அளிப்பார்கள் என்றால் சரிதான். பயனாளிகள் அட்டை வைத்திருந்தாலும் 100 நாள் வேலை திட்டத்திற்கு செல்வதும், செல்லாமல் இருப்பதும் அவரவர் சொந்த விருப்பம் என்றால் சரிதான். 100 நாள் வேலைவாய்ப்பு பணி அட்டை வைத்திருப்பவர்கள் அந்த பணிக்கு செல்வது கட்டாயம் இல்லை என்றால் சரிதான். என் கணவர் கொத்தனார் வேலை செய்து வருகிறார். எனக்கு ஒரு பெண் பிள்ளை மட்டும். அவருக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. எனக்கு வருமான இழப்பு ஏற்பட்டது பொய் என்றால் சரியல்ல. புகாரை ஜெயமூர்த்தி என்பவர் அளித்தார். அவருக்கு விபத்தில் காயம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். ஜெயமூர்த்தி சாலை ஓரமாக நின்று கொண்டிருந்தார். ஓட்டுநரைத் தவிர மற்ற 11 நபர்களும் சாலையில் நின்று கொண்டிருந்தோம். விபத்து நடந்த இடத்தில் இருட்டாக இருந்ததா என்றால் வேனில் மட்டும் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. வாகனத்தின் சக்கரத்தை ஓட்டுநரே கழற்றி மாட்டிக் கொண்டிருந்தார். ஓட்டுநருக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். வேனில் இருந்து சுமார் 10 அடி தள்ளி நின்று கொண்டிருந்தோம். வேனை ஆப் செய்துவிட்டுதான் சக்கரம் மாற்றிக் கொண்டிருந்தார்.

2) வாகன ஓட்டுநர் கை பிரேக் ஏதேனும் போட்டிருந்தாரா என்று எனக்கு தெரியாது. விபத்து நடந்த சாலையில் இரு வாகனங்கள் தான் செல்லக்கூடிய அகலம் இருந்தது என்றால் சரிதான். அதில் ஒரு வாகனம் நின்றால் அதன் வலது புறம் ஒரு வாகனம் தான் செல்ல முடியும் என்றால் சரிதான். சென்னை நோக்கி வரும் வாகனங்கள் மதுராந்தகம்

புறவழிச்சாலையில் கீழிருந்து மேல் நோக்கி செல்லவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு கீழிருந்து மேலே செல்லும்பொழுது முன்னால் ஒரு வாகனம் சென்றால் தெரிய வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. லாரிக்கு முன்பாக வேறு ஏந்த வாகனம் செல்லவில்லை. விபத்து சாலையில் நடந்ததா அல்லது சாலையின் ஓரமாக நடந்ததா என்று காவல் துறை ஆவணங்களைப் பார்த்தால் தெரியும் என்றால் சரியல்ல.

3) குற்ற வழக்கில் லாரி ஓட்டுநர் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியாது. என் மீது லாரிதான் மோதியது, வேன் மோதவில்லை. புகாரில் வேன் எங்கள் மீது மோதியதாக குறிப்பிட்டிருந்தால் அது தவறு என்று சொன்னால் வேன் எங்கள் மீது மோதவிலலை. வழக்கில் மோட்டார் வாகன ஆய்வறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புகார், மனு மற்றும் முதல் விசாரணையில் லாரி எங்கள் மீது மோதியதாக கூறவில்லை என்பதால் 2ம் எதிர்மனுதாரர் எவ்வித நஷ்ட ஈடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.